# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 11700 / 2010 / எம்சி. 8 நாள் : 16.11 .2010**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 18.11.2010 வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம்

## நவம்பர் 2010

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | | 1 |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் | |
| 1 | பொறியியல் பிரிவு - சிறப்பு சாலைத் திட்டம் 2010 – 2011ல் சிப்பம் IIன் கீழ் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப் புள்ளிகள் கோரியது - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. | 2 |
| 2 | பொறியியல் பிரிவு - சிறப்பு சாலைத் திட்டம் 2010 – 2011ல் சிப்பம் IIIன் கீழ் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப் புள்ளிகள் கோரியது - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. | 3 |
| 3 | பொறியியல் பிரிவு - சிறப்பு சாலைத் திட்டம் 2010 – 2011ல் சிப்பம் Iன் கீழ் பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோருதல் - மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக. | 4 |
| 4 | வடக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண் 70 – கணபதி ராயப்பா நகர் குடிநீர் தொட்டி கட்டிடம் - கோவை சரக ஒருங்கிணைந்த குற்ற நுண்ணறிவுப் பிரிவு அலுவலகத்திற்கு அறைகள் வாடகைக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | 5 |
| 5 | Jnnurm – பில்லூர் 2-வது குடிநீர் திட்டம் - வெள்ளியங்காடு பகுதியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி – மின் இணைப்பு பெறுதல் -கட்டணம் செலுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்- தொடர்பாக | 5 |

நன்றியுரை

அ) திருக்குறள்

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்.

(குறள் 38)

விளக்கம்

பயனற்றதாக ஒருநாள்கூடக் கழிந்து போகாமல், தொடர்ந்து நற்செயல்களில் ஈடுபடுபவருக்கு வாழ்க்கைப் பாதையைச் சீராக்கி அமைத்துத் தரும் கல்லாக அந்த நற்செயல்களே விளங்கும்.

திருவள்ளுவர்

---

ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

பொருள் எண் 1

**பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி — சிறப்பு சாலைத் திட்டம் 2010 – 2011ல் சிப்பம் II-ன் கீழ் பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக.**

*********

அரசாணை G.O (Ms) எண் - 210 நாள் 9.9.2010ல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அரசாணையின்படி, கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ரூ. 520.86 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியும், இப்பணிகளை மூன்று சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் கடித எண் 25910/2010/E3 நாள் 18.9.2010 அன்று உத்தரவு வழங்கியுள்ளார்கள்.

இவற்றில் இரண்டாம் சிப்பத்திற்கு ரூ. 157.89 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 1.11.2010 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப் புள்ளிகள் அளித்துள்ளார்கள்.

(1) தி/ள் சரவணா கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை
(2) தி/ள் சாந்தி கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை 11.11.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டதில் தி/ள் சரவணா கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது கண்டறியப்பட்டது. தி/ள் சாந்தி கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி பெறவில்லை எனவும் கண்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 15.11.2010ல் தகுதி பெற்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி உறை திறக்கப்பட்டதில் தி/ள் சரவணா கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை நிறுவனத்தினர் 9.53% மதிப்பீட்டிற்கு அதிகம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். இந்நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளியினை குறைத்துக்கேட்க முடிவு செய்யப்பட்டது. இதன்படி இந்நிறுவனத்தின் விலைப்புள்ளியினை குறைத்துக்கேட்டு 15.11.2010 அன்று கடிதம் அளிக்கப்பட்டது. இந்நிறுவனம் முதலில் அளித்திருந்த 9.53% மதிப்பீட்டிற்கு அதிகம் விலையினை குறைத்து 4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் கொடுத்துள்ளது.

இதனை தொடர்ந்து தி/ள் சரவணா கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை நிறுவனத்திடம் மேலும் விலையினை குறைத்துக் கேட்க முடிவு செய்யப்பட்டது. மேலும் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் தி/ள் சரவணா கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை அவர்கள் தனது 16.11.2010ம் தேதிய கடிதத்தில் மேலும் விலையினை குறைத்து 4.78% மதிப்பீட்டிற்கு கூடுதல் விலைப்புள்ளி அளித்துள்ளனர். எனவே இந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாமென 16-11-2010 தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிந்துரை செய்துள்ளது.

எனவே இப்பணிக்கு மேலும் விலைப்புள்ளியினை குறைத்து 4.78% அதிகம் கொடுத்துள்ள தி/ள் சரவணா கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-
1. அனுமதிக்கலாம்.
2. மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் செலவினம் ஆகும் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. பொறியியல் பணி விதிகளின்படி (Engineering Manual) மதிப்பீட்டிற்கு 5% வரை கூடுதல் பெறப்பட்ட இப்பணிகளுக்கு அவசர அவசியம் கருதி மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:- 10585/2010/எம்டி3

---

-

பொருள் எண் 2

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி — சிறப்பு சாலைத் திட்டம் 2010 – 2011ல் சிப்பம் III-ன் கீழ் பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக.

*********

அரசாணை G.O (Ms) எண் - 210 நாள் 9.9.2010ல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறையின் அரசாணையின்படி கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ரூ. 520.86 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியும், இப்பணிகளை மூன்று சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் கடித எண் 25910/2010/E3 நாள் 18.9.2010 அன்று உத்தரவு வழங்கியுள்ளார்கள்.

இவற்றில் மூன்றாம் சிப்பத்திற்கு ரூ.174.70 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 1.11.2010 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப் புள்ளிகள் அளித்துள்ளார்கள்.

(1) தி/ள் சரவணா கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை
(2) தி/ள் கேசிபி இன்ஜினியர்ஸ் அண்டு பேப்ரிகேட்டர்ஸ், கோவை

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை 11.11.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டதில் தி/ள் சரவணா கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை நிறுவனம் மற்றும் தி/ள் கேசிபி இன்ஜினியர்ஸ் அண்டு பேப்ரிகேட்டர்ஸ், கோவை ஆகிய நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது கண்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 15.11.2010ல் இந்நிறுவனங்களின் விலைப்புள்ளி உறைகள் திறக்கப்பட்டதில் தி/ள் சரவணா கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை நிறுவனத்தினர் 23.39% மதிப்பீட்டிற்கு அதிகம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். தி/ள் கேசிபி இன்ஜினியர்ஸ் அண்டு பேப்ரிகேட்டர்ஸ், கோவை நிறுவனத்தினர் 9.00% மதிப்பீட்டிற்கு அதிகம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். மேற்படி இரு நிறுவனங்களில் முதலாவதாக விலைப்புள்ளி கொடுத்துள்ள தி/ள் கேசிபி இன்ஜினியர்ஸ் அண்டு பேப்ரிகேட்டர்ஸ், கோவை நிறுவனத்தினரை விலைப்புள்ளி குறைத்துக் கொடுக்க கோரப்பட்டது. இதன்படி இந்நிறுவனத்தின் விலைப்புள்ளியினை குறைத்துக்கேட்டு 15.11.2010 அன்று கடிதம் அளிக்கப்பட்டது. இந்நிறுவனம் முதலில் அளித்திருந்த 9.00% மதிப்பீட்டிற்கு அதிகம் விலையினை குறைத்து 4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் கொடுத்துள்ளது.

இதனை தொடர்ந்து தி/ள் கேசிபி இன்ஜினியர்ஸ் அண்டு பேப்ரிகேட்டர்ஸ், கோவை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மேலும் விலையினை குறைத்து கேட்கலாம் என முடிவு செய்யப்பட்டது. இதன்படி இந்நிறுவனத்தின் விலைப்புள்ளியினை குறைத்துக்கேட்டு 16.11.2010 அன்று கடிதம் அளிக்கப்பட்டது. இந்நிறுவனம் முதலில் அளித்திருந்த 4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் விலையினை மேலும் குறைத்து 4.90% மதிப்பீட்டிற்கு அதிகம் கொடுத்துள்ளது.

எனவே இப்பணிக்கு மேலும் விலைப்புள்ளியினை குறைத்து 4.90% அதிகம் கொடுத்துள்ள தி/ள் கேசிபி இன்ஜினியர்ஸ் அண்டு பேப்ரிகேட்டர்ஸ், கோவை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-
1. அனுமதிக்கலாம்
2. மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் செலவினம் ஆகும் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. பொறியியல் பணி விதிகளின்படி (Engineering Manual) மதிப்பீட்டிற்கு 5% வரை கூடுதல் பெறப்பட்ட இப்பணிகளுக்கு அவசர அவசியம் கருதி மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:- 10586/2010/எம்டி3

---

பொருள் எண் 3

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி — சிறப்பு சாலைத் திட்டம் 2010 – 2011ல் சிப்பம் I ன் கீழ் பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோர மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக.

*********

அரசாணை G.0 (Ms) எண் - 210 நாள் 9.9.2010ல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அரசாணையின்படி கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ரூ.520.86 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியும், இப்பணிகளை மூன்று சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் கடித எண் 25910/2010/E3 நாள் 18.9.2010 அன்று உத்தரவு வழங்கியுள்ளார்கள்.

இவற்றில் முதல் சிப்பத்திற்கு ரூ. 188.27 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 1.11.2010 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப் புள்ளிகள் அளித்துள்ளார்கள்.

(1) தி/ள் சரவணா கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை
(2) தி/ள் சாந்தி கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை 11.11.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டதில் தி/ள் சரவணா கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது கண்டறியப்பட்டது. தி/ள் சாந்தி கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி பெறவில்லை எனவும் கண்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 15.11.2010ல் தகுதி பெற்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி உறை திறக்கப்பட்டதில் தி/ள் சரவணா கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை நிறுவனத்தினர் 28.85% மதிப்பீட்டிற்கு அதிகம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். இந்நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளியினை குறைத்துக்கேட்க முடிவு செய்யப்பட்டது. இதன்படி இந்நிறுவனத்திடம் விலைப்புள்ளியினை குறைத்துக்கேட்டு 15.11.2010 அன்று கடிதம் அளிக்கப்பட்டது. இந்நிறுவனம் முதலில் அளித்திருந்த 28.85% மதிப்பீட்டிற்கு அதிகம் விலையினை மேலும் குறைத்து 24.94% மதிப்பீட்டிற்கு அதிகம் கொடுத்துள்ளது.

இதனை தொடர்ந்து மேலும் விலையினை குறைத்து கொடுக்க 16-11-2010 அன்று தி/ள் சரவணா கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை நிறுவனத்தாரை கேட்டுக் கொண்டதனை தொடர்ந்து மேற்படி நிறுவனத்தார் மேலும் விலையை குறைக்க இயலாது எனவும், ஏற்கனவே அளித்திருந்த 24.94% மதிப்பீட்டிற்கு அதிகமாக கொடுத்துள்ள விலை விகிதத்திலேயே பணி செய்வதாக தெரிவித்துள்ளனர். மேலும் 16-11-2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு கூட்டத்தில் இப்பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் முடிவு செய்ய பரிந்துரை செய்துள்ளது.

எனவே இப்பணிக்கு விலைப்புள்ளியினை 24.94% அதிகம் கொடுத்துள்ள தி/ள் சரவணா கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யவும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- அனுமதிக்கலாம். தி/ள் சரவணா கன்ஸ்டிரக்ஷன்ஸ், கோவை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யலாம். இப்பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்

ந.க.எண்:- 10584/2010/எம்டி3

---

**பொருள் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல எல்லைக்குட்பட்ட 70-வது வார்டு கணபதி ராயப்பா நகர் வாட்டர் டேங்க் கட்டிடத்தில் காலியாக உள்ள இரண்டாம் தளத்தில் 632 சதுரடி மற்றும் 500.5 சதுரடி அளவுள்ள இரண்டு அறையினை அலுவலக உபயோகத்திற்காக ஒதுக்கீடு செய்து தரும்படி காவல் ஆய்வாளர், ஒருங்கிணைந்த குற்ற நுண்ணறிவுப் பிரிவு கோவை சரகம் அவர்கள் 19.10.2010-ல் கேட்டுள்ளார்.

பொதுப்பணித்துறை வழிகாட்டுதலின்படி இரண்டாம் தளத்தில் உள்ள 632 சதுரடி மற்றும் 500.5 சதுரடி அளவுள்ள இரண்டு அறையினை சதுரடி ஒன்றுக்கு ரூ.10.28/- என இளம் பொறியாளர் வாடகை கணக்கிட்டு கொடுத்ததின் பேரில் 1132.5 சதுரடி கட்டிடத்திற்கு வாடகை ரூ.11,645/- ஆகிறது. இதனை காவல் ஆய்வாளர், ஒருங்கிணைந்த குற்ற நுண்ணறிவுப்பிரிவு கோவை சரகம் அவர்களுக்கு தெரிவித்ததின் பேரில் 12.11.2010-ம் தேதிய கடிதத்தில் மேற்குறிப்பிட்டுள்ள அறைகளுக்கு மாதவாடகையாக ரூ.11645/- செலுத்த சம்மதம் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி கட்டிடத்தை அலுவலக பயன்பாட்டுக்கு ரூ.11,645/-மாத வாடகைக்கு காவல் ஆய்வாளர், ஒருங்கிணைந்த குற்ற நுண்ணறிவுப்பிரிவு கோவை சரகத்திற்கு ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் அனுமதி பெற்று மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 12454/10/WS3/(வ)

---

**பொருள் எண் 5**

கோவை மாநகராட்சி பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.113.74 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பணியான வெள்ளியங்காடு பகுதியில் 125 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி மெஸ்ஸர்ஸ் கிர்லோஸ்கர் அண்டு பிரதர்ஸ் நிறுவனம், புனே என்ற நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு கட்டுமான பணிகள் டிசம்பர் 2010 மாதத்திற்குள் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீர் சுத்திகரிப்பு நிலையம் இயங்க தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின் இணைப்பு வேண்டி கடந்த 15.06.2010-ம் தேதியன்று விண்ணப்பிக்கப்பட்டது. மருதூர் 110/ 22 KV உப நிலையத்திலிருந்து வழங்கப்படும் உயர் அழுத்த மின் இணைப்பு, அதிகபட்ச உயர் அழுத்த மின் அளவு 3000 KVA வழங்க கண்காணிப்புப் பொறியாளர், மின்சார வாரியம்(வடக்கு), கோவை அவர்கள் 1 KVA விற்கு ரூ.800 வீதம் 3000 KVA அளவு மின்சார இணைப்பு பெறுவதற்கு முன் வைப்புத் தொகையாக ரூ.24,00,000 மற்றும் பதிவுக் கட்டணம் ரூ.500 சேர்த்து ஆக மொத்தம் ரூ.24,00,500/- ஐ செலுத்த 13.07.10ல் கேட்பு பெறப்பட்டு மாமன்றத் தீர்மான எண்.99 நாள் 03.09.10-ல் அனுமதி பெறப்பட்டு கடந்த 23.09.10-ல் தொகை செலுத்தப்பட்டது.

தற்போது சுத்திகரிப்பு நிலையத்திற்கு மேற்படி உயர்மின் இணைப்பு வழங்க கீழ்க்கண்ட விபரப்படி தொகையினை செலுத்த கண்காணிப்புப் பொறியாளர், மின்சார வாரியம்(வடக்கு), கோவை அவர்களிடமிருந்து கடந்த 29.10.10-ல் கேட்பு பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| அபிவிருத்திக் கட்டணமாக 1 KVA க்கு 350/- வீதம் 3000 KVA- க்கு | - | ரூ.10,50,000/- |
| மின் அளவுமானி காப்பு தொகை | - | ரூ. 40,000/- |
| முன் மின் இணைப்புக் கட்டணம் | - | ரூ.1,46,190/- |
| மின்தடபாதையில் உள்ள பழைய 22 KV மின் தடங்களை மாற்றி அமைக்க | - | ரூ.1,63,040/- |
| மொத்த செலுத்த வேண்டிய தொகை | - | ரூ.13,99,230/- |

மேற்படி தொகையான ரூ.13,99,230/- (ரூபாய் பதிமூன்று இலட்சத்து தொன்னூற்றி ஒன்பது ஆயிரத்து இருநூற்று முப்பது மட்டும்) செலுத்துவதற்கும் அதற்கான செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலவழிக்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்தில் வெள்ளியங்காடு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 3000 KVA மின் இணைப்பு பெறுவதற்குண்டான செலவினம் ரூ.13,99,230/- (ரூபாய் பதிமூன்று இலட்சத்து தொன்னூற்றி ஒன்பது ஆயிரத்து இருநூற்று முப்பது மட்டும்) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மாநராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலுத்துவதற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்

ந.க.எண்: 12454/10/WS3/(வ)

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

**பொருள் எண் 3 (சிப்பம் எண்.1)**

| **வ.எண்** | **வார்டு எண்** | **வேலையின் விபரம்** | **மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில்** |
|---|---|---|---|
| 1 | 28 | காளிங்கராயன் வீதி மற்றும் பிள்ளையார் கோவில் வீதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 8.80 |
| 2 | 28 | ராமர் கோவில் வீதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 25.25 |
| 3 | 28 | நாகப்பசெட்டியார் வீதியில் நடைபாதை அமைத்தல் | 2.45 |
| 4 | 28 | தபேதார் வீதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 6.30 |
| 5 | 40 | வெண்ணல் நாயுடு வீதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 4.70 |
| 6 | 41 | எல்.ஜி தோட்டம் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.75 |
| 7 | 43 | திருவள்ளுவர் நகரில் சிமெண்ட் சாலை அமைத்தல். | 1.30 |
| 8 | 47 | கிருஷ்ணப்பா வீதியில் சிமெண்ட் சாலை அமைத்தல். | 2.10 |
| 9 | 47 | கங்குவார் வீதியில் சிமெண்ட் சாலை அமைத்தல். | 2.50 |
| 10 | 41 | ராமர் கோவில் வீதியில் கனிராவுத்தர் வீதி சந்திப்பு முதல் பட்டகார அய்யாசாமி கோவில் சந்திப்பு வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | 3.90 |
| 11 | 18 | சரோஜினி வீதி மற்றும் நந்தகோபால் குறுக்கு சந்துகளில் வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | 12.15 |
| 12 | 22,24 | ராமலிங்க ஜோதி நகர் , பெரியார் நகர் மற்றும் நேரு நகர் ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 7.45 |
| 13 | 41 | சி. எம். சி காலணியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 6.00 |
| 14 | 70 | கணேஷ் லே அவுட் வீதி எண் 1 முதல் 9 வரை மற்றும் ஹரிப்பிரியா நகர் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 38.20 |
| 15 | 72 | லட்சுமி நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகளில் தார் தளம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 61.42 |
| | | **மொத்தம்** | **188.27** |

## சிறப்பு சாலை திட்டம் 2010-11
## பணிகளின் விபரம்

**பொருள் எண் 1 (சிப்பம் எண்.2)**

| வ.எண் | வார்டு எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 28 | சாஸ்திரி சாலையில் தார் தளம் அமைத்தல் | 27.50 |
| 2 | 28 | காளிதாஸ் சாலையில் தார் தளம் அமைத்தல். | 12.50 |
| 3 | 28 | சத்தியமுர்த்தி சாலையில் தார் தளம் அமைத்தல். | 19.50 |
| 4 | 28 | செங்குப்தா வீதியில் தார் தளம் அமைத்தல் | 9.00 |
| 5 | 25 | திருச்சி சாலை மற்றும் உக்கடம் புறவழி இணைப்பு சாலையில் தார் தளம் அமைத்தல். | 26.00 |
| 6 | 48 | செண்ட் முனுசாமி சாலையில தார் தளம் அமைத்தல் . | 13.97 |
| 7 | 52 | கிருஷ்ணன் வீதியில் தார் தளம் அமைத்தல். | 8.92 |
| 8 | 56 | கருப்பண்ண பாதையில் (எஸ்.பி. ஓ.ஏ பள்ளி சாலை ) தார் தளம் அமைத்தல். | 40.50 |
| | | **மொத்தம்** | **157.89** |

**பொருள் எண் 2 (சிப்பம் எண். 3)**

| | | | |
|---|---|---|---|
| 1 | 6 | கோத்தாரி நகரில் தார் தளம் அமைத்தல். | 67.00 |
| 2 | 14 | மீனா எஸ்டேட் பகுதியில் தார் தளம் அமைத்தல். | 74.50 |
| 3 | 20 | நேதாஜி சாலையில் அவினாசி சந்திப்பு முதல் புதிய திட்ட சாலை வரை தார் தளம் அமைத்தல். | 18.20 |
| 4 | 13 | சுசீலா நகர் (எஸ்.எஸ். லே அவுட் மற்றும் ஸ்ரீவள்ளி நகர் விரிவாக்கம் வரை ) சிமெண்ட் தளம் அமைத்தல் | 15.00 |
| | | **மொத்தம்** | **174.70** |